(அ) அம்பை தாலுக்காவைச் சார்ந்த மருதம்புத்தூர் புதுப் பட்டி, குத்தபாஞ்சான் போன்ற பஞ்சாயத்துக்களை ஆலங் குளம் தாலுக்காவோடு இணைக்கவேண்டும் என்று பொதுமக்க ளிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், தென் காசி வட்டத்தைச் சீரமைத்து ஆலங்குளத்தைத் தலைமையிட மாகக் கொண்டு ஏற்படுத்த பரிசீலிக்கப்பட்டு வரும் வட்டத்துடன் மருதம்புத்தூர் ஊராட்சிப் பகுதியை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளது.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

எழுமலைப் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்.

*3133—திரு. ஆ. அதியமான் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேடப்பட்டித் தொகுதியிலுள்ள எழுமலைப் பேரூ ராட்சியில் பேருந்து நிலையம் கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

9-15 மணி

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எழுமலை என்பது பேரூராட்சி மட்டுமல்ல, அதைச் சுற்றியுள்ள 10, 15 ஊர்களுக்கும் எழுமலையில்தான் பேருந்து நிலையம் இருக்கிறது. மதுரையிலிருந்தும், தேனியிலிருந்தும் தினமும் அநேக பேருந்துகள் அங்கே வருகின்றன. அங்கேயிருக்கிற பேருந்து நிலையம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. மக்கள் அடிக்கடி கூடும் இடமாக அது இருப்பதால் அந்த இடத் தில் நிலையான பேருந்து நிலையத்தை அமைக்க முன்னுரிமை கொடுத்து அதற்கு ஒப்புதல் அளிக்க, தமிழக அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : எழுமலையில் பேருந்து நிலையம் கட்டுவதற்கான இடங்களை ஆய்வு செய்ததில், அதற்குப் போதுமான, தேவையான இடம் அங்கே இல்லாததால், மாவட்ட

1990 மார்ச் 31]

ஆட்சித் தலைவர் அந்த இடத்தில் பேருந்து நிலையம் கட்ட இயலாது என்ற செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன் நின்று, அங்கே அதற்கான இட ஏற்பாட்டைச் செய்து கொடுத்தால், நிச்சயமாக பேருந்து நிலையம் கட்ட நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

தாரமங்கலம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்

* 6325—திரு. கே. அர்ஜுனன்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், தாரமங்கலம் பேரூராட்சியில் நிலம் ஆர்ஜிதம் செய்து பேருந்து நிலையம் கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாரமங்கலம் பேரூராட்சியில் தற்போது உள்ள பேருந்து நிலையத்தை இடித்துவிட்டு புதிய பேருந்து நிலையத்தை பேரூராட்சிக்குச் சொந்தமான நிலத்திலேயே கட்டுவதற்குத் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இப்பேருந்து நிலையத்திற்குக் கூடுதலாக நிலம் ஏதும் ஆர்ஜிதம் செய்யத் தேவையில்லை.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதிருக்கிற இடம் வசதி போதாது என்ற காரணத்தாலும், அங்கே 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் புறப்படக்கூடிய அளவுக்கு நிறைய போக்குவரத்து நெருக்கடி உருவாகியிருக்கிற காரணத்தாலும், சேலத்தைச் சுற்றியிருக்கிற இடங்களுக்குச் செல்கிற லாரிகள் நேரத்தை மிச்சப்படுத்தும் வகையில், போக்குவரத்துக்கள் அங்கே செல்கிற காரணத்தாலும், சங்ககிரியிலிருந்து ஓமலூருக்கும் தர்மபுரிக்கும் செல்கிற வண்டிகள் அவ்வழியாக செல்கிற காரணத்தாலும், அங்கே இடம் போதாமல் இருக்கிறது. ஆகவே, அங்கே இருக்கிற கடைக்காரர்களை அப்புறப்படுத்திவிட்டு பஸ் நிலையத்தை விரிவாக மாற்றியமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் பேரூராட்சி பேருந்து நிலையத்திற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமோ அந்தத் தகுதிகளுக்குரிய பேருந்து நிலையத்திற்கான இடம், பேரூராட்சி மன்றத்தின் வசமே இருக்கிறது. அதாவது தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற இடம், புல எண். 176/1, ஏ-1, 1பி1 1பிஏ, மற்றும் 2-ல் உள்ள நிலத்திலேயே கட்டுவதற்கு ஒருங்கிணைந்த